தவிர்க்க வேண்டியவை

- அஞ்சலி. மௌன வணக்கம், மலரஞ்சலி. மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அக வணக்கம், - ஒருநிமிடம் இருநிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.

சேர்க்கப்பட வேண்டியவை

- வீரவணக்கம், அகவணக்கம், மலர்வணக்கம், ஈகைச்சுடர், வீரவணக்கஉரை, வீரச்சாவு வீரவணக்கக்கூட்டம்.

முக்கிய விடயம்

மாலை 6.00மணிக்குப் பின்னர் எந்த நிகழ்விற்கும் தேசியக்கொடி ஏற்றுதல் தவிர்க்கப்படல் வேண்டும் இரவில் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுமானால் நிகழ்வு முடிய இறக்குதல் வேண்டும். இவரில் தேசியக் கொடிக்கு வெளிச்சம் இருத்தல் வேண்டும்.

- எக்காரணம் கொண்டும் தேசியக்கொடியைக் கம்பத்துடன் மடித்துக்கட்டுதல் தவிர்க்கப்படல் வேண்டும். தேசியக்கொடியை மடித்து பீடத்திற்கு அருகில் ஒரு இருக்கையில் (ஸ்ரூலில்) வைக்க வேண்டும்.

## *போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்*

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும். எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சகபோராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின்

